நித்திரவிளை ஜெயமாதா ஆலயத்தில் செயல்படும் ஜெயமாதா கிளைச்சபை சார்பில் 14.01.2024 ஞாயிறு காலை 9 மணி அளவில் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் சுழற்சித் திட்டம் வழங்குதல் நடைபெற்றது. ஆடு வளர்த்தல் மற்றும் விறகு விற்பனை செய்தல் போன்றவற்றிற்காக சுழற்சி கடனுதவி திட்டம் மூலம் 6 நபர்களுக்கு தலா பத்தாயிரம் வீதம் ரூபாய் 60 ஆயிரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வட்டார சபை தலைவர் சகோதரர். ஜெயலால் அவர்களும் மத்திய சபை விரிவாக்க அலுவலர் சகோதரர் கிறிஸ்துதாஸ் அவர்களும் உடனிருந்தனர். மத்திய சபை திட்ட அலுவலர் சகோதரர் எட்வின்சன் கோப்புகளை ஆய்வு செய்து தேவையான ஆலோசனைகளை வழங்கினார். மகளிர் கிளை சபை சார்பிலும் திட்டத்தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளை கிளைச்சபை தலைவர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

### *சுய தொழில் கடன் உதவி திட்டம்*

சூசைபுரம் வட்டார சபைக்கு உட்பட்ட சூசைபுரம் புனித மேரி பெண்கள் கிளைச்சபை, சார்பில் 11.2.2024 இல் சுய தொழில் கடன் உதவி திட்டம் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் அடிகளார்



தலைமையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய சபையின் திட்ட அலுவலர் சகோ.எட்வின்சன் அவர்கள் முன்னிலை வகித்தார். வட்டார சபை தலைவர் சகோ. ஜாண் அவர்களும், வட்டார சபையின் திட்ட அலுவலர் சாகோ. ஜோஸ் ஐவின்ராஜ் அவர்களும் நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்கள். சுய தொழில் கடன் உதவி திட்டம் வாயிலாக 14 பயனாளிகளுக்கு 7300/. வீதம் தொகை 1,02,200/. வழங்கப்பட்டது. கிளைச்சபை தலைவி சகோதரி.ரோஸ்லி அவர்கள் இத்திட்டத்தை சிறப்புற செயல்படுத்தி வருகிறார்.

***சகோ. D.Pஷாஜி***
***தகவல் தொடர்பு அலுவலர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து




***ஈசோவில் அன்பார்ந்தவர்களே,***

அருட்சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். பிப்ரவரி மாதம் 20 மற்றும் 21 தேதிகளில் மறைமாவட்ட ஆவணக்கப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளதும்கல் அவர்கள் உஜ்ஜைன் ருஹாலயா உயர்குருத்துவ கல்லூரியில் உள்ள நமது அருட்சகோதரர்களை சந்தித்தார். சென்னையில் உள்ள அருட்சகோதரர் பிபின் அவர்களையும் பேரருட்தந்தை ஜோஷி அவர்கள் சந்தித்தார். அருட்சகோதரர்களின் நலம் மற்றும் படிப்பு பற்றி விசாரித்தார். மேலும் அவர்களுக்காக திருப்பலி நிறைவேற்றினார். கல்லூரியில் பயிலும் அருட்சகோதரர்கள் கல்லூரி ஆண்டு விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று தம் திறமைகளை வெளிப்படுத்தினர். கோட்டயம் புனித தோமையார் உயர்குருத்துவ கல்லூரியில் மூன்றாம் ஆண்டு தத்துவவியல் பயிலும் அருட்சகோதரர்களுக்கு பிப்ரவரி 20 அன்று பிரியாவிடை வழங்கப்பட்டது. அனைத்து அருட்சகோதரர்களும் தங்கள் இரண்டாம் பருவத்தேர்வை எழுதிக்கொண்டிருக்கின்றனர். எங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி. தொடர்ந்தும் புனிதமான குருவானவர்களாக மாற எங்களுக்காக வேண்டுங்கள். நன்றி.

***சகோ. சுனில் ஆன்றணி***



மிக சாதுரியமாக ரயிலை நிறுத்தி பெரும் விபத்தை தவிர்த்த தென்காசி மாவட்டம் புளியரை கிராமத்தைச் சார்ந்த தம்பதி திரு சண்முகஜயா திருமதி வடக்கத்தியம்மா ஆகியோரை புலரி சமூக சேவை மையத்தின் சார்பாக 07.03.2024 அன்று வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

தக்கலை இளையோர் கல்வி பணியகம்
Thuckalay Youth Educational Services
in Collaboration with Trichy Don Bosco Vazhikatti

***பள்ளி மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி***

குளச்சல் கார்மல் ஜோதி பள்ளியில் 8 மற்றும் 9ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சியானது 09/02/2024 வெள்ளிக்கிழமை காலை 10 முதல் 1 மணி வரை மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது. வகுப்பானது தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை அஜின் C ஜோசப் மற்றும் செல்வன்.மெரின் சுஜித் ஆகியோர்களால் நடத்தப்பட்டது. வ்வகுப்பானது மாணவர்கள் இன்றைய காலத்தில் எவ்வாறு ஒழுக்கத்துடன் செயல்பட வேண்டுமென்றும், ஊடக அடிமைத்தனத்திலிருந்து எவ்வாறு மீள்வது என்றும், இலக்கு நிர்ணயித்தல் மற்றும் சுய மதிப்பீடு



போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் பயிற்சி வகுப்பானது நல்ல முறையில் நடத்தப்பட்டது. இதில் 150-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குகொண்டனர். மாணவர்கள் மத்தியில் இவ்வகுப்பானது பல மாற்றங்களை ஏற்படுத்தும் வண்ணம் மிகச்சிறந்த முறையில் அமைந்திருந்தது. இவ்வாறாக, தக்கலை கல்வி சேவை பணியகம் இயக்குநர் அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்கள் வழிகாட்டுதலின் கீழ் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

***ஜெசிலா மேரி,***
***ஒருங்கிணைப்பாளர்***

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

### கடற்கரை தூய்மைபடுத்தல் முகாம்



தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு மற்றும் நெகிழியில்லா நெய்தல்படை அறக்கட்டளை இணைந்து கடற்கரை தூய்மைபடுத்தல் முகாம், இரவிபுத்தன்துறை பகுதியில் 2024 பிப்ரவரி 04 அன்று மாலை 4 மணியளவில் நடைபெற்றது. கிறிஸ்துராஜபுரம் ஆலய பங்குதந்தை அருட்தந்தை ஜோமி கமுகுமற்றத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நித்திரவிளை ஆலய இளையோர்கள், அறக்கட்டளை தன்னார்வலர்கள் என ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர்.

### உலக நோயாளிகள் தினம்

உலக நோயாளிகள் தினத்தை முன்னிட்டு 2024 பிப்ரவரி 10 அன்று நெய்யூர், புற்றுநோய் மைய நோயாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. ஸ்ரீராம் கேன்சர் டிரஸ்ட் நிறுவனர் மருத்துவர் திரு. செந்தில் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழிப்புணர்வு உரை வழங்கினார். மாங்கரை ஆலய இளையோர்கள் கலந்து கொண்டு கலை நிகழ்வுகளை வழிநடத்தினர்.

### விழிப்புணர்வு வகுப்புகள்

இதய நலம் பேணுவதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு வகுப்புகள் 2024 பிப்ரவரி 23, 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் முறையே நித்திரவிளை அரசு மேல்நிலைப்பள்ளி, கல்லுவிளை KKSSS அரங்கம் மற்றும் தெற்றியோடு, புனித பவுல் ஆலய வளாகத்தில் நடத்தப்பட்டது. தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் CTC அவர்கள் கருத்தாளராக கலந்து கொண்டு வகுப்புகளை வழிநடத்தினார்.

***அருட்சகோதரி. டயானா SDS***
***செயலர்***

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## *Talent Fest-2023*

மாற்றுத்திறனாளிகளின் கல்வி, நல்வாழ்வு, மறுவாழ்வு, பாதுகாப்பு போன்றவற்றை அரசு கவனத்திற்கு கொண்டு செல்ல தக்கலை மறை மாவட்டத்தின் கீழ் இயங்கும் சிறப்பு பள்ளிகளை ஒருங்கிணைத்து கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் AIDACT என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

சிறப்பு பள்ளி மாணவர்களின் திறமையை வளர்க்க இந்த ஆண்டிற்கான கலைவிழா Talent Fest-2024 எனும் தலைப்பில் பிப்ரவரி 11-இல் கல்லுவிளை ஆசிர் அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில், AIDACT இயக்குனர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதனை KKSSS இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் குத்து விளக்கேற்றி துவங்கி வைத்தார்கள். இதில் 7 சிறப்பு பள்ளிகளிலிருந்து சுமார் 142 மணவர்கள் கலந்து கொண்டனர்

மணவர்களின் போட்டித் திறனை ஆரோக்கியமானதாகவும் உற்சாகப்படுத்தும் விதத்தில் நினைவுத்திறன் சோதித்தல், பேச்சுப்போட்டி, நடனப்போட்டி மற்றும் ஆசிரியர்களுக்கான குழு விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றது. இறுதி நிகழ்வில் KKSSS பாதுகாவலர் மற்றும் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் உரையாற்றும் போது பொக்கிஷமாய் கருவில் பொத்தி பொத்தி வளர்த்த குழந்தை மனநல குறைவோடு பிறந்தால் ஆனந்தங்கள் அழிந்து விடும். சிறப்பு குழந்தைகளை நாம் பார்த்தால், ஒரு பரிதாப பார்வை வீசிவிட்டு கடந்து செல்வோம். அவர்களை பேணிக்காக்கும் பெற்றோர் ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் துயரத்திலிருந்தும், உறவினர்களின் ஏளனப் பார்வையிலிருந்தும் விடுபட சிறப்பு பள்ளிகள் உழைக்கின்றனர் எனக்கூறினார். சிறப்பு விருந்தினராக KKSSS தலைவர் மற்றும் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் சிறப்புரையாற்றினார். மேலும், போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளை பாராட்டி பரிசுகளை வழங்கினார். AIDACT இயக்குனர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் வாழ்த்துரை வழங்கினார். இதில் KKSSS அலுவலகப்பணியாளர்கள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## P.M.F.M.E

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், கல்லுவிளை தக்கலை சுய உதவி மகளிர்கள் இணைந்து பிப்பிரவரி 2 தேதி முதலாறு பகுதியில் P.M.F.M.E நடைபெற்றது.அரசின் தொழிற்பயிற்சி திட்ட அலுவலர் திரு.சுஜித் அரசின் திட்டங்களும் பற்றியும் என்ற வகுப்பை வழிநடத்தினார்கள். தொடர்ந்து திரு சேகர்



அவர்கள் மத்திய அரசின் மானிய சலுகை திட்டமான P.M.F.M.E என்ற திட்டத்தினையும் தொழில்முனைவோர் உருவாக்குவது பற்றியும் பேசினார். தொடர்ந்து தக்கலை சுய உதவி மகளிர்களுக்கான C.L.F கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் 50-க்கு மேற்பட்டோர்கள் கலந்த கொண்டனர்.

### *கண் மருத்துவ முகாம்*

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், கல்லுவிளை நாஞ்சில் கல்லூரி சமூக பணித்துறை மாணவர்கள் மற்றும் வாசன் ஐ கேர் இணைந்து நடத்திய கண் மருத்துவ முகாம் கிறிஸ்துராஜபுரம், கிறிஸ்து அரசர் ஆலய வளாகத்தில் பிப்ரவரி 27ஆம் தேதி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு KKSSS இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் வழிகாட்டுதலில் துணை இயக்குநர் அருட்தந்தை அஜின் C ஜோசப் அவர்கள் தலைமை தாங்கினார். இதில் நாஞ்சில் கல்லூரி



சமூகப் பணித்துறை பேரா.மேரி சிறப்புரையாற்றினார். தொடர்ந்து வாசன் ஐ கேர் PRO திரு அகிலன் தலைமையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 100-க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இலவச பரிசோதனை செய்து இலவச மருந்தும் அளிக்கப்பட்டது. இதில் 2 மருத்துவர் உட்பட 18 பயிற்சி மருத்துவர்களும் கலந்து கொண்டனர்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# புலரி சமூக சேவை சங்கம்
## தென்காசி மறைபரப்புதளம்

### இதயம் காப்போம் விழிப்புணர்வு நிகழ்வு




புலரி சமூக சேவை மையத்தின் சார்பில் “இதயம் காப்போம்” என்னும் மையச் சிந்தனையில் மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்கு மற்றும் பேரணி 15.02.2024 அன்று புலரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடத்திலும் 16.02.2024 அன்று புனித ஜோசப் சிபிஎஸ்இ பள்ளிக்கூடத்திலும் 17.02.2024 அன்று தாட்கோ நகர் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் நடைபெற்றது. தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழு செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் அவர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். இதில் ஏறக்குறைய ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்று பயன் பெற்றனர்.

### உலக நோயாளர் தினம்

உலக நோயாளர் தினத்தை முன்னிட்டு 18.02.2024 அன்று வாஞ்சி நகர் புனித மரியன்னை ஆலயத்தில் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. முகாமில் திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவர்கள் வருகை தந்து நோயாளிகளுக்கு பரிசோதனைகள் வழங்கினார்கள். ஏறத்தாழ 125 பேர் பங்கேற்று பயன்பெற்றனர். ஒன்பது பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

### பொதுத் தேர்வு வழிகாட்டி வகுப்பு

பனிரெண்டு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவ மாணவியருக்கு தேர்வு குறித்த வழிகாட்டுதல் வகுப்பு புலரி சமூக சேவை மையத்தில் 10.02.2024 அன்று நடைபெற்றது. அருட்பணி. மகேஷ் மற்றும் திரு. பிரதின் ஆகியோர் வகுப்புகள் நடத்தினர். சுமார் 30 மாணவ மாணவியர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# மறைத்தள செய்திகள்

## தென்காசி

### *திருத்தொண்டர்களின் பணி*



இராமநாதபுரம் மறைமாவட்டத்தை சார்ந்த 3 திருத்தொண்டர்கள் வருகை தந்து பிப்ரவரி மாதம் 19 முதல் 25 வரையிலான நாட்களில் தென்காசி மறைத்தளத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் சென்று பணியாற்றியதுடன் அன்பு இல்லத்தில் 3 நாட்கள் தங்கி பணிபுரிந்தனர்.

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணி அளவில் பார்டரில் வைத்து நடத்தப்பட்டது. தக்கலை மறைமாவட்டத்திலிருந்து மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் திரு எட்வின்சன், திரு ஜாண் பிறைட், திரு தினேஷ் ஆகியோர்கள் வருகை தந்து தென்காசி மறைத்தளத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் மறைக்கல்வி வகுப்புகளை பார்வை இட்டு, குழந்தைகளை நன் முறையில் ஊக்குவித்தார்கள்.




## தெரசா பாலியேட்டிவ் கேர், திருநெல்வேலி

தற்போது 16 வெவ்வேறு கிராமங்களில் உள்ள 78 குடும்பங்களுக்கு எங்கள் பராமரிப்பு சேவையை விரிவுபடுத்தியுள்ளோம். TPR வெப்பநிலை, துடிப்பு மற்றும் சுவாசம், இரத்த அழுத்தம் மற்றும் இரத்த சர்க்கரை அளவு போன்றவற்றை சரிபார்த்து நோயாளிகளை மதிப்பீடு செய்கிறோம். வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப சரியான உதவியை கட்டணமின்றி வழங்குகிறோம். இந்த மாதம் நாங்கள் 3 புதிய நோயாளிகளை சந்தித்தோம். நோயாளிகளில் ஒருவர் மோட்டார் நியூரான் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். நோயாளியின் தேவைக்கேற்ப நாங்கள் உதவினோம்.

### கயத்தாறு

திருத்தொண்டர்கள் பிராங்க் மற்றும் நிதின் ஆகியோர் ராஜபுதுக்குடி, T.N குளம் போன்ற கிராமங்களில் ஒரு வாரம் திருத்தொண்டு பணியாற்றினார்கள். வீடு சந்தித்தல் மற்றும் ஒருநாள் கருத்தரங்கும் நடத்தினார்கள்.



### மதுரை

2024 பிப்ரவரி 10 அன்று மதுரை அரியூரில் உள்ள புனித. மேரி தேவாலயத்தில் விரிவாக்கப்பட்ட மறைபரப்புத்தளங்களில் பணிபுரியும் அனைத்து அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்ளுக்கான கூட்டம் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.



2024 ஜனவரி 26,27,28 ஆகிய நாட்களில் மதுரை மறைபரப்புத்தளம் ஆரியூரில் இறை சமூகங்கள் இணைந்து புனித மேரி ஆலயத்தில் வைத்து 48 மணி நேர சிறப்பு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. இதில் சுமார் 48 குடும்பங்கள் பங்கேற்றனர்.

### தேனி

கேரளா மாநிலம் உப்புத்தரா என்ற ஆலயத்தில் உள்ள இளையர்கள் (KCYM) தேனி மறைத்தளத்தில் வருகைதந்து பார்வையிட்டனர்.

# மரியாயின் சேனை இயக்கம்
## தக்கலை கொமித்சியம்

***புனித சூசையப்பர் ஆலயம், காரோடு***

25-02-2024 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலி முடிந்தவுடன் காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் மரியாயின் சேனை சார்பாக மரியன்னை செய்தி மற்றும் மரியாயின் சேனை இயக்கம் குறித்து தலைவர் சகோ. தோமஸ் பன்னீர் செல்வம் அவர்கள் விளக்கி கூறினார்கள். புதிய பொறுப்பாளர்கள் 4 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அனைத்து ஏற்பாடுகளையும் பங்குதந்தை அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் கவனித்துக் கொண்டார்கள். மரியாயின் சேனை இயக்கம் தொடங்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்து உதவிய பங்குத்தந்தை அவர்களுக்கு தக்கலை கொமித்சியம் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.



***புனித அன்னை தெரசா ஆலயம், கல்லுவிளை***

18-02-2024 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலி முடிந்தவுடன் கல்லுவிளை அன்னை தெரசா ஆலயத்தில் மரியாவின் சேனை சார்பாக மரியன்னை செய்தி மற்றும் மரியாயின் சேனை இயக்கம் குறித்து தலைவர் சகோ. தோமஸ் பன்னீர் செல்வம் அவர்கள் விளக்கி கூறினார். அனைத்து ஏற்பாடுகளையும் பங்குத்தந்தை அருட்தந்தை எபி அவர்கள் கவனித்து கொண்டார்.



# மறைமாவட்டச் செய்திகள்

## இரண்டாம் அருட்தந்தையர்கள் பேரவையும் அதன் தொடக்கவிழாவும்

அருட்தந்தையர்கள் பேரவையின் 2வது தொடக்கவிழா மற்றும் முதல் கூட்டம் 27 பிப்ரவரி 2024 அன்று சங்கமத்தில் வைத்து நடத்தப்பட்டது. முதல் அமர்வானது 10 மணியளவில் ஜெபத்துடன் ஆரம்பமானது. பின்னர் குருகுல முதல்வர் தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். ஆயர் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார். சங்ஙனாச்சேரி உயர்மறைமாவட்டத்திலிருந்து வருகை தந்த இரண்டு அருட்தந்தையர்கள் அருட்தந்தை. டாம் புத்தன்குளம் மற்றும் அருட்தந்தை. றாபி தலச்செல்லூர் ஆகியோர் பல கருத்துக்களை வழங்கி தொடக்க அமர்வை வழிநடத்தினர். அருட்தந்தை. றாபி நமது மறைமாவட்ட அருட்தந்தையர்கள் பேரவை மற்றும் நமக்கு தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பயனுள்ள ஆலோசனைகளை வழங்கினார். இரண்டாவது அமர்வில், செயலாளர் கடந்த அருட்தந்தையர்கள் பேரவையின் அறிக்கையை சமர்ப்பித்தார். இதனைத் தொடர்ந்து புதிய உறுப்பினர்கள் தெர்வுசெய்யப்பட்டனர். பேரருட்தந்தை.ஜோஷி குளத்தும்கல் செயலாளராக இரண்டாவது முறையாக பதவியேற்றார். மேலும் பேரருட்தந்தை.ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை. ரோபின் கூருமுள்ளில், மற்றும் அருட்தந்தை.பிரின்டோ குரியாஸ் நிகழ்ச்சி நிரல் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மதியம் 01:30 மணிக்கு நிகழ்வுகள் முடிவடைந்தது. அனைத்து மன்ற உறுப்பினர்கள் புதிதாகப் பதவியேற்ற செயலாளர் மற்றும் நிகழ்ச்சிக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆயர் அவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

## அருட்தந்தை பிலிப் கொடியந்தற நினைவுத்திருப்பலி

தக்கலை மறைமாவட்ட முன்னால் குருகுல முதல்வர் பேரருட்தந்தை பிலிப் கொடியந்தற அவர்களின் 11 வது நினைவுத்திருப்பலி 2024 பிப்ரவரி 9 அன்று காயல்புறத்தில் உள்ள அவரது கல்லறையில் நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் திருப்பலிக்கு தலைமை தாங்கினார். அருட்தந்தை மகேஷ் அவர்கள் மறையுரை வழங்கினார். மறைமாவட்ட அருட்தந்தையர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

10-2-2023 அன்று குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குக் குழந்தைகள் பங்கேற்று மறைமாவட்ட அளவில் இரண்டாம் இடம் பெற்றனர்.

12-2-2024 அன்று சாம்பல் திங்கள் திருநாளை முன்னிட்டு மாலை 6 மணிக்குத் திருப்பலி மற்றும் திருச்சடங்குகள் நடைபெற்றது. தவக்காலத்தை முன்னிட்டு எல்லா வியாழக்கிழமைகளிலும் மாலை 6:00 மணி முதல் 7.30 மணி வரை நற்கருணை ஆராதனை நடைபெற்று வருகிறது. எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6:00 மணிக்கு திருப்பலியும் அதைத் தொடர்ந்து சிலுவை பாதையும் நடைபெற்று வருகிறது.

### புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

24-2-2024 அன்று புனித ராணி மரியாவின் திருநாளை முன்னிட்டு உறவிய அளவில் புனித ராணி மரியாவின் வாழ்க்கை வரலாறை மையமாகக் கொண்டு வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டது.



25-2-2024 அன்று இதய விழிப்புணர்வு மற்றும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் பங்கு மக்கள் மற்றும் ஊர் மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

### புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு

பிப்ரவரி 25 ஞாயிறு திருப்பலிக்கு பின் திருமண வாழ்வு சட்டங்கள் குறித்த கருத்தரங்கு அருள் முனைவர் ஜோஷி அவர்களால் நடத்தப்பட்டது. பங்குத்தந்தை அவர்கள் வரவேற்று தொடக்க உரை ஆற்றினார். பின்னர் அருள் முனைவர் ஜோஷி அவர்கள் திருமணத்திற்கு தேவையான மறை மாவட்ட சட்டங்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் ஆகியவற்றை எடுத்துரைத்தார். தொடர்ந்து பங்கு மக்கள் ஒரு சில சந்தேகங்களையும் கேட்க, அதற்கான விளக்கத்தையும் அளித்தார். அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்தது என பங்குமக்கள் கருத்து தெரிவித்தனர். நிறைவில் திரு. பெர்லின் அவர்கள் நன்றி கூறினார்.



அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்தில் வைத்து பிப்ரவரி நான்கு ஞாயிறன்று திருப்பலிக்கு பின் காலை 10 மணிக்கு படந்தாலுமூடு HF மருத்துவமனை சார்பில் இலவச பொது மருத்துவ முகமானது நடைபெற்றது. பங்குத்தந்தை அவர்கள் ஜெபம் செய்து முகாமை ஆரம்பித்து வைத்தார். இம்மருத்துவ முகாமில் மூட்டு வலி, சர்க்கரை நோய், கொலஸ்ட்ரால், சிறுநீரக நோய்கள், ரத்த குறைபாடு, தோல் வியாதி, உடல் பருமன் போன்ற நோய்களுக்கு ஆலோசனையும் மருந்துகளும் வழங்கப்பட்டன. சுமார் 60 பேர் பயன் அடைந்தனர்.

## மஞ்சாலுமூடு

**புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு**



மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா ஆலயத்திற்கு உட்பட்ட புனித லூர்து மாதா உறவிய ஆண்டு விழா 12-02-2024 அன்று நடைபெற்றது

## தக்கலை பிலாங்காலை

**புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை.**



இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலியைத் தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது. பிப்ரவரி 22,23 ஆகிய தினங்களில் தவக்கால திருப்பயணம் ஆலயத்தில் திருப்பலியுடன் தொடங்கி வழியில் 5 ஆலயங்களுக்கு சென்று இறுதியில் வேளாங்கண்ணி சென்று பங்குத்தந்தை பேரருட்தந்தை ஜோஷி, அருட்தந்தை. ஆல்பர்ட் மற்றும் அருட்சகோதரிகளுடன் சிலுவைப் பாதை மற்றும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் 26 பேர் கலந்து கொண்டனர். அனைத்து நிகழ்ச்சிகளையும் பங்குதந்தை முன்னின்று நடத்தினார்.

## களியல்

### ▶ புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் களியல் 18-2-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7:15 மணிக்கு ஆயர் அவர்கள் வருகை புரிந்தார்கள். காலை 7:30 மணிக்கு சிறப்பு காணிக்கை பவனியுடன் திருப்பலி நடைபெற்றது. திருப்பலி நிறைவு பெற்றவுடன் காலை உணவு வழங்கப்பட்டது. அதன் பின் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்கள், பங்கு பேரவை அனைத்தையும் ஆயர் அவர்கள் பார்வையிட்டார்கள். பின்னர் நிறை குறைகள் அனைத்தும் கலந்துரையாடப்பட்டது. மதியம் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. பின்பு மதிய உணவு வழங்கப்பட்டது. அதன் பின் இறைமக்கள் ஆயர் அவர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்தனர் பிறகு ஆயர் அவர்கள் நோயாளிகளை வீட்டில் சென்று சந்தித்து அவர்களுக்கு இறை ஆசீர் வழங்கினார்.

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் தேவாலயம் தவக்கால தியானம் 11-02-2024 ஞாயிறு மாலை திருப்பலி முடிந்தவுடன் அருட்தந்தை ஜெனிட்டோ அவர்களால் நடத்தப்பட்டது.



சாம்பல் திங்கள் திருப்பலி மற்றும் வழிபாடானது பங்குத்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

### ▶ புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி

புனித தோமையார் ஆலயம் மாறப்பாடியில் பிப்ரவரி 12 ம் நாள் சாம்பல் திங்கள் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது

## சூசைபுரம்

### ▶ புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்

தவக்கால தயாரிப்பாக 09-02-2024 வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து பாவ சங்கீர்த்தன வழிபாடும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

11-02-2024 ஞாயிற்றுக்கிழமை திருப்பலியானது பங்கில் உள்ள அனைத்து நோயாளிகளுக்காகவும் சிறப்பான முறையில் ஒப்புகொடுக்கப்பட்டது. மேலும் ஆலயத்திற்கு வர இயலாத நோயாளிகளின் வீடுகளுக்கு சென்று அவர்களுக்கு நற்கருணை வழங்கப்பட்டது.

அன்று திருப்பலிக்குப் பின்னர் மறைவட்ட அருட்பணி பேரவைக்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் நிகழ்வு நடைபெற்றது. மதியம் 2 மணி அளவில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான BTCT வகுப்பானது நடைபெற்றது.

12-02-2024 சாம்பல் திங்கள் அன்று பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆண்டனி ஜோஸ் மற்றும் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி ஆகியோர் இணைந்து திருப்பலி நிறைவேற்றினர். சாம்பல் திங்கள் திரு நிகழ்வுகளில் பங்கில் உள்ள பெருவாரியான மக்கள் பங்கேற்றனர். தவக்காலத்தின் திங்கள், செவ்வாய், புதன், சனி ஆகிய நாட்களில் காலை 5.30 மணிக்கு திவ்ய நற்கருணை ஆராதனை, 5.45 மணிக்கு ஜெபமாலை மற்றும் 6.15 மணிக்கு திருப்பலி ஆகிய திரு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. தவக்காலத்தின் எல்லா வியாழக்கிழமைகளிலும் திருப்பலிக்கு பின்னர் நற்கருணை ஆராதனையும் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் திருப்பலிக்கு பின்னர் சிலுவைப்பாதையும் நடைபெற்று வருகின்றது. இந்நாட்களில் திருப்பலிக்கு குழந்தைகள் வருகை தருவதை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு நாளும் ஒரு குழந்தைக்கு பரிசு வழங்கப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ 75 குழந்தைகள் தினம் தோறும் காலை திருப்பலியில் கலந்து கொள்கின்றனர்.

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

1-02-2024 ஞாயிறு கல்லறை தோட்ட சிற்றாலைய ஆண்டு விழாவும் உயிர் நீத்தோர் நினைவு தினமும் சிறப்பிக்கப்பட்டது. மாலை 5 30 மணிக்கு புனித அல்போன்சா கலைக்கல்லூரி முதல்வர் அருட்தந்தை மைக்கிள் ஆரோக்கியசாமி SDB அவர்கள் தலைமையில் திருப்பலியும் பங்குத்தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் மெழுகுவர்த்தி ஏந்தி பவனியும் நடைபெற்றது. கல்லறை தோட்டத்தில் இறந்தோருக்கான நினைவு ஜெபமும் கல்லறை மந்திரிப்பும் நடைபெற்றது. நிறைவாக அன்பின் விருந்து நடைபெற்றது.

12-02-2024 திங்கள் மாலை 6.30 மணிக்கு நடைபெற்ற திருப்பலியில் தவக்கால நிகழ்வுகள் தொடங்கியது. அனைவருக்கும் நெற்றியில் சாரம் பூசி பங்குத்தந்தை தவக்காலத்தை தொடங்கி வைத்தார். அன்றிலிருந்து அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் திருப்பலியும் ஆராதனையும் சிலுவைப் பாதையும் நிறைவில் நேர்ச்சை கஞ்சியும் வழங்கப்படுகிறது. தினமும் நடைபெறும் திருப்பலியில் சுமார் 100 பேர் பங்கேற்று பயன்பெறுகின்றனர்.

18.02.2024 இல் பங்கு பொது மன்றம் நடைபெற்றது. பங்கிலிருந்து ஏழு பேர் மறைவட்ட அருள்பணி பேரவைக்காக தேர்வு செய்யப்பட்டனர்..

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

9-2-2024 அன்று அனைத்து இறந்தவர்களின் திருநாளை முன்னிட்டு மாலை 05.30 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதைத்தொடர்ந்து ஒப்பீசும் நடைபெற்றன. இறந்தவர்களின் போட்டோ கொண்டு வந்து ஆலயத்தின் முன் பகுதி மோண்டளத்தில் வைத்து நடுவில் விரிப்பு விரித்து பூக்கள் மற்றும் மெழுகுவர்த்தி ஏற்றி சிறப்பான செபம் முறையில் நடைபெற்றது



10-2-2024 அன்று மறைக்கல்வி ஆசிரியை திருமதி சிஞ்சு அவர்களின் இல்லத்தில் வைத்து அருட்தந்தை மற்றும் அருட்சகோதரிகள் தலைமையில் ஜெபக்கூட்டம் நடைபெற்றன.

சனி, ஞாயிறு நாட்களில் உறவியங்களில் 16 இல்லங்கள் தேர்ந்தெடுத்து 16 இல்லங்களில் சென்று சிலுவை பாதை நடத்தப்பட்டது. எல்லா வியாழக்கிழமைகளிலும் மாலை 6 மணிக்கு ஆலயத்தில் இளையோர்கள் சார்பில் சிலுவைப் பாதை நடைபெற்றது.

18-2-24 அன்று பிற்பகல் 2 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் பங்குப் பேரவை கூட்டம் நடைபெற்றது

25-2-24 அன்று பங்குத்தந்தையின் தலைமையில் அருட்சகோதரி. அல்போன்சம்மா அவர்களுக்கான பொன் விழாவின் திருப்பலி சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்பலி முடிந்தவுடன் வாழ்த்துரை வாழ்த்துப் பாடல், கேக் வெட்டுதல் மற்றும் பங்கு சார்பாக பரிசும் லட்டும் வழங்கப்பட்டது. அருட்சகோதரி.அல்போன்சம்மா அனைவருக்கும் ஜெபமாலை வழங்கினார்கள்.

29-2-24 அன்று +2 தேர்வு எழுதுகின்ற மாணவர்களுக்கு சிறப்பு திருப்பலியும் அதைத்தொடர்ந்து சிறப்பு ஜெபமும் நடைபெற்றது.

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்.

பாத்திமா அன்னை ஆலயத்தில் 2-2-24 முதல் வெள்ளிக்கிழமை மாலை அருட்தந்தை மேத்யூ தெக்கேகூற்று அவர்களால் திருப்பலி, நற்கருணை ஆராதனை, ஒப்புரவு அருட்சாதனம் ஆகியவை நடைபெற்றது. இதில் அனைத்து பங்கு மக்கள் கலந்துகொண்டனர்.

11-2-24 அன்று அருட்தந்தை மேத்யூ தெக்கேகூற்று அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலி முடிந்த பிறகு நோயாளிகளுக்கு சிறப்பு ஜெபம் செய்யப்பட்டது. நோயினால் ஆலயத்திற்கு வர முடியாதவர்களுக்கு நற்கருணை வீடுகளுக்கு சென்று வழங்கப்பட்டது.

12-2-24 அன்று அருட்தந்தை.மேத்யூ தெக்கேகூற்று அவர்களால் திருப்பலியுடன் நோன்பின் அடையாளமாக நெற்றியில் சாம்பல் பூசி தவக் காலத்தை தொடங்கி வைத்தார்கள்.

16-2--24 அன்று வெள்ளிக்கிழமை மாலை திருப்பலி மற்றும் சிலுவைப் பாதை நடைபெற்றது. இதில் அனைத்து பங்கு மக்களும் கலந்து கொண்டனர்.

## நித்திரவிளை

- **புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை**

பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி, மாதத்தின் முதல் வியாழக்கிழமை தொடர் ஜெபமாலை மற்றும் திருப்பலி, நற்கருணை ஆராதனை, நற்கருணை பவனி வழிபாடுகள் அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ஜெபமாலை உறவியங்கள் வாயிலாக சிறப்பிக்கப்பட்டது. பதினொன்றாம் தேதி உலக நோயாளிகள் தினத்தில் பங்கு மற்றும் பிற நோயாளிகளுக்காக சிறப்பு திருப்பலி ஒப்பு கொடுத்து ஜெபித்தனர். ஒன்பதாம் தேதி அனைத்து இறந்தவர்களுக்காகவும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 12ஆம் தேதி காலை சாம்பல் திங்கள் திருச்சடங்குகள் நடைபெற்றது. அனைத்து இறை மக்களும் வழிபாடுகளில் கலந்துகொண்டு பயனடைந்தனர். 15ஆம் தேதி அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் ஆராதனை மற்றும் நற்கருணைக் கொண்டாட்டத்தைச் சிறப்பித்தார்கள். எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் ஈசோவின் சிலுவையின் பாடுகள் குறித்து தியானித்து ஜெபித்து திருப்பலி ஒப்புக்கொடுத்து வருகின்றனர்.

- **புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை**

உலக நோயாளிகள் தினம் பிப்ரவரி பதினொன்றாம் நாள் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் பங்கில் உள்ள அனைத்து நோயாளிகளையும் ஆலயத்திற்கு அழைத்து வந்து திருப்பலி

ஒப்புக்கொடுத்து அவர்களுக்காக ஜெபித்து பரிசு வழங்கி மகிழ்ந்தனர்.

25ஆம் தேதி மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ஆண்டகை அவர்களின் பாஸ்டரல் விசிட் (ஆயருடன் ஒருநாள்) நடந்தது. காலை மேதகு ஆயர் அவர்களுக்கு வரவேற்பும் தொடர்ந்து ஆயர் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்குப் பின் எல்லா இறை மக்களையும் சந்தித்து பேசினார்கள் ஆயர் அவர்கள். அதன் பின்பு ஒவ்வொரு பக்த இயக்கங்களாக எல்லா மாணவர்கள், ஆசிரியர்கள், தாய்மார்கள், வின் செந்தியர்கள், இளைஞர்கள் என்று சந்தித்து நிறை குறைகள் கேட்டும் அறிவுரை வழங்கியும் மகிழ்ந்தார்கள். அன்றைய தினம் ஆயர் அவர்களுக்கும் பங்குத்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்களுக்கும் பங்கு மக்கள் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியின் ஒரு நன்னாளாக அமைந்தது. மேலும் மறைவட்டத்தில் உள்ள எல்லா பங்குகளிலும் தவக்கால துவக்க நாளான சாம்பல் திங்கள் அன்று திருப்பலியும் சாம்பல் பூசுதல் வழிபாடும் நடைபெற்றது. ஈசோவின் பாடுகள் குறித்து தியானிக்கும் விதமாக சிறப்பு தியானங்களும் ஒப்புரவு வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

| BIRTHDAY OF REV. FATHERS - MARCH - 2024 | |
|---|---|
| FR. JOSEPH SANTHOSH | 03 |
| FR. MATHEW THEKKEKUTT | 15 |
| FR. THOMAS POWATHUPARAMPIL | 15 |
| FR. SINOY PANACKACHALIL MCBS | 19 |
| FR. THOMAS SATHIANESAN | 20 |
| FR. BENNY THATTAMPARAMPIL | 25 |
| FR. ANTONY MAHESH | 28 |

## MONTHLY AGENDA – MARCH 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 2 | Sat | 10.00 am<br>2.00 pm<br>3.00 pm | **MIG:** Core Committee Metting @ Bishop's House<br>**KKSSS:**Women's Day Celebration@ Annikarai<br>**KKSSS:** Women's Day Celebration @ Varuthattu |
| 3 | Sun | 10.00 am<br>10.00 am<br>10.00 am<br>02.30 am<br>02.30 am | **LC:** Meeting@ Kaliyal Forane<br>**SMYM**: Spiritual Renewal & TAIZE PRAYER @ Unit Level<br>**SVP**: CC Meeting<br>**KKSSS**: Women's Day Celebration @ Anjugramam<br>**KKSSS:** Women's Day Celebration@ Pilankarai |
| 4 | Mon | 10.00 am<br>12 to2 pm<br>02.00 pm<br>06.30 pm | **KKSSS:** Women's Day Celebration @ Munchirai<br>**FA: Dr.** Robin's Visit<br>**KKSSS:** Women's Day Celebration @ Muzhucode<br>**ARUKANI, KALIYAL, MANJALUMOODU FORANE PRIESTS' CONFERENCE @** St. Chavara Church Kuttaicode |
| 5 | Tue | 10 am<br>10 am<br>05 pm | **NITHIRAVILAI & PADANTHALUMOODU FORANE PRIESTS' CONFERENCE @** Jayamatha Church Nithiravilai<br>**KKSSS:** Staff Assessment And Review Meeting<br>**THUCKALAY:** Mission Meeting @ Bishop's House |
| 6 | Wed | 03.00 pm<br>06.00 pm | **KKSSS**: Women's Day Celebration @ Karode<br>**SOOSAIPURAM & THUCKALY-PILANKALAI FORANE PRIESTS' CONFERENCE** @ St. Alphonsa Church Nagercoil |

| | | | |
|---|---|---|---|
| 7 | Thu | 10.00 am<br>10.30 am<br>02.00 pm<br>02.30 pm | **FINANCE COUNCIL:** Meeting@ Bishop's House<br>**KKSSS:** Women's Day Celebration @ Kalluvilai<br>**LC:** Meeting @ Bishop's House<br>**KKSSS:** Women's Day Celebration @ Malaicode |
| 8 | Fri | 10.00am<br>10.00 am<br>11.00 am<br>02.30 pm<br>02.30 pm | **MJ:** Annual Day Celebration And Women's Day Celebration @ Kalluvilai<br>**KKSSS:** Educare Class<br>**KKSSS:** Women's Day Celebration @ Marappady<br>**KKSSS:** Women's Day Celebration @ Mukkuttukal<br>**PSSS:** Annual Day Of Pulari And Women's Day Celebration |
| 9 | Sat | 09.30am<br>10.00am<br>10.00am<br>10.00 am | **AIDED SCHOOLS:** Correspondents And Principals Meeting@ Kalluvilai<br>**SINAI:** One Day Retreat @ Palugal<br>**FA:**Marriage Preparation Course @ Kalluvilai<br>**HC**: Health Awareness Programme |
| 10 | Sun | 09.00 am<br>09.00 am<br>02.30 pm | **SMYM:**Spiritual Renewal & TAIZE Prayer @ Unit Level<br>**SVP:**Ac Meeting<br>**KKSSS:** Women's Day Celebration@ Orunnoormavayal |
| 11 | Mon | 11. 00am<br>11.00 am | **KKSSS**: Women's Day Celebration @ Mathapuram<br>**KKSSS:** Women's Day Celebration @ Vayalinkarai |
| 12 | Tue | 10.00 am<br>11.00 am<br>02.00 pm<br>02.30 pm | **DEPARTMENTS' MEETING** @ Bishop's House<br>**KKSSS:** Women's Day Celebration @ Pilankarai<br>**ALPHONSA COLLEGE:** GB Meeting @ Soosaipuram<br>**KKSSS:** Women's Day Celebration @ Soosaipuram |

| | | | |
|---|---|---|---|
| 13 | Wed | 02.30 pm<br>02.30 pm | **KKSSS:** Women's Day Celebration@ Palappallam<br>**KKSSS:** Women's Day Celebration @ Kazhuvanthittai |
| 14 | Thu | 02.30 pm | **KKSSS:**Women's Day Celebration @ Pallikonam |
| 15 | Fri | 10.00 am<br>05.00 pm | **FA:** Marriage Preparation Course @ Kalluvilai<br>**SINAI:** One Day Retreat @ Palappallam |
| 16 | Sat | 10.00am<br>10.00 am<br>10.00 am<br>02.00 pm<br>02.00 pm<br>02.00 pm<br>02.00 pm<br>02.30 pm<br>02.30 pm | **FA**: Marriage Preparation Course @ Kalluvilai<br>**SELF-FINANCE SCHOOLS:** Correspondents And Principals Meeting@ Sangamam<br>**TENKASI:** Mission Meet<br>**CAT:** HM Meeting @ Kalluvilai<br>**CML**: International Executive Committee Meeting<br>**KII:** Forane Level Monthly Activity<br>**HC**: Programme For SHG<br>**KKSSS:** Women's Day Celebration @ Padanthalumoodu<br>**KKSSS:** Women's Day Celebration @ Netta |
| 17 | Sun | 10.00 am<br>10.00 am<br>10.00 am<br>10.00 am<br>10.00 am<br>02.30 pm<br>02.30 pm<br>02.30 Pm | **CAT:** 2nd Semester Examination (1/2 to 9th Standard)<br>**FA:** Marriage Preparation Course @ Kalluvilai<br>**CML:** Prayer And Study On St. Joseph<br>**SMYM:** Spiritual Renewal & TAIZE Prayer @ Unit Level<br>**KII:** Forane Animators And Organisors Visit @ Parishes<br>**MIG:** Online Way Of The Cross<br>**KKSSS:** Women's Day Celebration@ Thuckalay<br>KKSSS: Women's Day Celebration@ Mankarai |
| 18 | Mon | 12.00pm-02.00pm | **FA:** Dr. Robin's Visit |

| | | | |
|---|---|---|---|
| 19 | Tue | 09.00 am<br>10.00 am | **KKSSS**: Training Programme @ Kalluvilai<br>**BISHOP'S HOUSE**: Meeting With Fathers Of 6 to 11 Years Of Priestly Ordination |
| 23 | Sat | 10.00 am<br>10.00 am | **KKSSS: Animators Annual Review Meeting**<br>**SINAI: One Day Retreat @ Retreat Centre** |
| 25 | Mon | 07.00 am | **SANGAMAM**: Vestition & Minor Orders |
| 26 | Tue | 05.00 pm | **PALUGAL:** Diaconate Ordination |
| 27 | Wed | 09.30 am | **SANGAMAM**: Priests And Relegious Recollection |

**Fr. Thomas Powathuparampil, Protosyncellus**

### ▶ அருட்தந்தை செபாஸ்டின் மஞ்சேரிக்களம் நினைவுத்திருப்பலி

அருட்தந்தை செபாஸ்டின் மஞ்சேரிக்களம் அவர்களின் 41 ம் நாள் நினைவுத்திருப்பலி 2024 பிப்ரவரி 17 மாலை 5.30 மணியளவில் நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலய வளாகத்தில் நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். தொடர்ந்து ஆயர் தலைமையில் நினைவுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொது நிலையினர் என ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மறைவட்ட பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் பங்கு மக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

### ▶ இளங்குருக்களுக்கான பயிற்சி

மறைமாவட்ட இளங்குருக்களுக்கான உருவாக்கல் பயிற்சி 2024 பிப்ரவரி 20 அன்று காலை 10.30 மணியளவில் தக்கலை ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. குழித்துறை மறைமாவட்ட அருட்தந்தை ஜெரால்டு ஜெஸ்டின் தியான உரை வழங்கினார். தொடர்ந்து நற்கருணை ஆராதனை மற்றும் ஒப்புரவு அருளடையாள நிகழ்வும் நடைபெற்றது. மதிய உணவிற்கு பின் அருட்தந்தையர்கள் தங்களது பணி அனுபவங்களையும் சவால்களையும் பகிர்ந்து கொண்டனர்.

| FEASTDAYS OF REV. FATHERS - MARCH 2024 | |
|---|---|
| FR. AJIN JOSE | 19 |
| FR. AJIN C JOSEPH | 19 |
| FR. BENNY THATTAMPARAMPIL | 19 |
| FR. DENCY MUNDUNADACKAL | 19 |
| FR. GINOY THOTTIYIL | 19 |
| FR. JIMMY THEKKEKADUMATHIL | 19 |
| FR. JINU THEKKETHALACKAL | 19 |
| FR. JOMON MANGALAMADOM | 19 |
| FR. JOSE ALBERT CMI | 19 |
| FR. JOSE KANACHIKUZHIYIL | 19 |
| FR. JOSE KOOLIPURACKAL CMI | 19 |
| FR. JOSE MUTTATHUPADOM | 19 |
| FR. JOSE VAYALIL | 19 |
| FR. JOSEMON PAUL PURAYIDATHIKUNNEL | 19 |
| FR. JOSEPH ANITHOTTAM CMI | 19 |
| FR. JOSEPH SANTHOSH | 19 |
| FR. JOSY PUTHENPURACKAL | 19 |
| FR. LIJU MARATTUKALAM | 19 |
| FR. PRINCE CHERIPPANATTU | 19 |
| FR. PRINCE MALIYIL | 19 |
| FR. PRINTO KURIAS | 19 |
| FR. REJU PUTHUPARAMPIL MCBS | 19 |
| FR. ROBIN JOSE | 19 |
| FR. SAJAN NETTAPONGHU | 19 |
| FR. SOORAJ KADAVIL MCBS | 19 |
| FR. TIBIN KOOVALLOOR | 19 |
| FR. TOJI KOZHUVAKANDATHIL | 19 |
| FR. VINU D JOSEPH | 19 |

## BISHOP'S ENGAGEMENTS - MARCH 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | 10.00 am | Bishop's House |
| 2 | Sat | 10.00 am | Bishop's House |
| 3 | Sun | | Bishop's House |
| 4 | Mon | 10.30 am | Bishop's House: Liturgy commission meeting |
| 5 | Tue | 05.00 pm | Thuckalay: Mission Meeting @ Bishops House |
| 6 | Wed | 10.00 am | Bishop's House |
| 7 | Thu | 10.00 am<br>05.00 pm | Bishop's House: Finance council meeting<br>Annikarai: School Annual Day |
| 8 | Fri | 10.00 am | Kalluvilai: Matrujyothis Women's Day Celebration @ Kalluvilai |
| 9 | Sat | 09.30 am | Bishop's House: Curia meeting |
| 10 | Sun | 07.00 am | Pastoral Visit : St. James Church, Mankarai |
| 11 | Mon | 10.00 am | Bishop's House: Meeting with Brothers |
| 12 | Tue | 02.00 pm | Soosaipuram: College GB meeting |
| 13 | Wed | 05.00 pm | Thenkasi: Mission visit |
| 14 | Thu | 05.00 pm | Vellarada : Holy Qurbana @ Kurisumala |
| 15 | Fri | 03.00 pm | Mukkoottukal : Minor Seminary Visit |
| 16 | Sat | 10.00 am | Bishop's House : Meeting with Self Finance School Correspondents and Principals |
| 17 | Sun | 07.00 am | Pastoral Visit : Little Flower Church, Plankalai |

| | | | |
|---|---|---|---|
| 18 | Mon | 09.30 am | Changancherry : Bishop Powathil First Death Anniversary Holy Qurbana |
| 19 | Tue | 10.00 am | Bishops House: Meeting with fathers of 6 – 11 years of ordination |
| 20 | Wed | 09.30 am | Bishop's House : Curia Meeting |
| 21 | Thu | 05.00 pm | Kazhuvanthittai : Nambikkaialayam Annual Day |
| 22 | Fri | 10.00 am<br>02.00 pm | Palugal: Visit to Angel Garments<br>Killiyoor: Visit to Devamatha Garments |
| 23 | Sat | 10.00 am<br>02.00 pm | Vayalinkari: Visit to Arputham Garments<br>Thuckalay: Visit to Sangamam Garments |
| 24 | Sun | 07.00 am | Bengiri: Palm Sunday |
| 25 | Mon | 07.00 am<br>10.00 am | Sangamam: Vestition and Minor orders<br>Sangamam: Meeting with brothers |
| 26 | Tue | 05.00 pm | Palugal: Diaconate Ordination |
| 27 | Wed | 09.30 am | Sangamam : Priests and Religious recollection |
| 28 | Thu | 05.00 pm | Soosaipuram : Holy Thursday |
| 29 | Fri | 10.00 am | Virudunagar : Good Friday |
| 30 | Sat | 10.00 pm | Chenamcode : Easter Holy Qurbana |
| 31 | Sun | | Bishop's House |

**Fr. Liju Mathew, Bishop's Secretary**



Kaithar Mission Kattalai Vaippu,
February 15, 2024



Ash Monday, Thadikarankonam,
February 12, 2024



**Pastoral Visit, Kaliyal, February 18, 2024**



**Pastoral Visit, Vayalankarai, February 25, 2024**


**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570